குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்: பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 8-7-58 செவ்வாய் | இசை: 6

பெரியார் போர் வெல்லும்

(எடுப்பு)

சாதி ஒழிக எனக்கூவும் தாய்க்கோழி
தானே பற்றுக இளந்தமிழ்ப் புள்ளினம்! (சாதி)

(உடனெடுப்பு)

ஆதிப் பெருமை பெரியாரை அல்லால்
தமிழருக் களிப்பவர் வேறெவர் உள்ளார்? (சாதி)

(அடிகள்)

ஏதடா கட்சிகள் இங்கே?
எவ்வெவர் மூச்சுக்கும் மூச்சாய்
போதெலாம் தொண்டுசெய் கின்றார்
போம்வழி போதலே அல்லாமல் வேறு
புகலிடம் தமிழருக் கெங்குண்டு தேறு (சாதி)

தீயபார்ப் புக்குப் பிறந்த
தேவடி யாள்மக்கள் போலே
ஆயாது தீநெறிச் சென்றாய்
அம்மியா காவேரி ஆற்றுக்குத் தெப்பம்?
பெரியார் அடிச்சுவடு நன்மை பயக்கும் (சாதி)

நாய்குலைத் தா நத்தம் பாழாம்?
நன்றறியாத உன்னால் என்ஆம்?
தூய்குரல் எவரும்ஒன் றென்று
தோன்றிற்றுக் கேள்அது நாம்பெற்ற செல்வம்
பெரியார் தொடங்கிய போர்ஒன்றே வெல்லும் (சாதி)

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ ஆனி ௨௪.

புதுப்போர்!

சாதி ஒழிய வேண்டும் என்பதும்
தமிழக விடுதலை வேண்டும் என்பதும்,
குள்ளக் கருத்தா? வெள்ளம் போன்ற
தமிழர் நலத்துக்குத் தக்கன அன்றோ?

ஒழியாச் சாதி ஒழிய வேண்டும்
தமிழகம் அடிமை தவிர்தல் வேண்டும்
என்னும்இக் கொள்கை எல்லாத் தமிழரின்
கொள்கை அன்றோ? இந்தக் கொள்கை
வெல்லு மாயின் எல்லாத் தமிழர்க்கும்
அல்லல் தீரும் இழிவும் அகலும்
அறிவு பெருகும் மடமை அகலும்
என்பதில் இம்மியும் பொய்ம்மை உண்டா?
தமிழ்ப்பெரு மக்களே, சற்றே எண்ணுமின்!

பெரியார் சொன்னார் பெரியார் ஆதலின்!
அரிய இவற்றை அவரை அல்லால்
எவரால் இங்கே சொல்ல முடிந்தது?
எவர்தாம் இதுவரை சொல்ல லானார்?

சொன்னார் பெரியார் என்பது மட்டுமா?
செய்தார் பெரியார் செய்வார் பெரியார்
என்பதில் இம்மியும் பொய்ம்மை உண்டா?

ஆயிரம் ஆண்டுகள் அகன்றன! வரலாறு
சாக வில்லை இருக்கக் கண்டோம்
அவ்வர லாற்றில்ஓர் தமிழர் தலைவனைக்
கண்ட துண்டோ? காதுதான் கேட்டதா?
பெற்றோம் இன்றுதான் பெறற்கரும் பேற்றை!
பெற்றோம் இன்றுதான் பெரியார் தம்மை!

அன்புடை யீரே அறிவுடைத் தமிழரே
பெரியார் என்பது வயதும் பெற்றார்

பிறக்க முடியாது!

பிறக்க முடியா தடி—
உனைப்போல் ஒருத்தி.

பெண்ணழ கால்இந்த
மண்ணரசாள இனிப்
பிறக்க முடியா தடி—
உனைப்போல் ஒருத்தி
மறக்கவும் முடியாது
கண்ணே உன் முகத்தையும்
வாரி ஒளிவீசும்
நகைமுத்துச் சரத்தையும்!
இறக்கவும் முடியாதே
உனைஇழந்தே னென்றே
இருக்கவும் முடியாதே
உனைப்பிரிந்தே னென்றே.

பிறக்க முடியா தடி—
உனைப்போல் ஒருத்தி!

பறக்கவும் முடியாது
நீ எனை விட்டே
பச்சைமயி லேவாஎன்
வாழ்வின்பொ ருட்டே
திறக்கவேண்டும் உன்வாய்
என்நலம் கோரி
தென்னாடு பெற்றஎன்
கிளிப்பேச்சுக் காரி.

பிறக்க முடியா தடி—
உனைப்போல் ஒருத்தி!

இருக்கும் போதே விடுதலை எய்தலாம்
கட்சி வேண்டாம். கலகம் வேண்டாம்
எப்பிரி விற்கும் ஆட்படல் இன்னலே!
எல்லா மக்களும் இரும்புக் குண்டுபோல்
ஒன்று படுதல் வேண்டும் இன்றே!
நன்று பெறுதல் வேண்டும் அனைவரும்

திராவிடர் கழகம் சிறிய தன்றே
அஃது பெரியார்க் குரிய தன்றே
சாற்றுவேன்! அஃது தமிழரின் உடைமை!
பொதுவாம் இயக்கம்! பொதுவாம் நிறுவனம்!
அங்கி ருந்து கிளம்பும் அரும்போர்
பொதுப்போர்! புதுப்போர்! எழுக எழுக.

புதிய தோர்தமிழ் உலகம்
இதோ! இதோ! வெல்க எழிற்றமிழ் நாடே!

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௧ ஆடி ௭.

உடன் ஒத்துழைத்தல் கடன் தமிழர்கட்கு!

குயில் இரண்டாம் முறையாகத் துவக்கப் பட்டது. எதிர்பார்த்தைவிட ஆதரவு பெருகி வருகின்றது. இப்பெருக்கம் தமிழர்களிடையே வலுத்து வரும் தமிழ்ப்பற்றைக் காட்டுகின்றது; தமிழ்நாட்டுப் பற்றைக் காட்டுகின்றது.

இந்நிலைக்குக் காரணம் பெரியார் இயக்கம் ஒன்றே என்பதை நாம் மறந்தால் வாழ்வே நம்மை மறக்கும்.

குயிலுக்கு உடன் ஒத்துழைத்தல் கடன் தமிழர்கட்கு.

குயிலுக்கு - குயிலின் மேன்மைக்கு - குயிலின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பது இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுக்கும் ஒத்துழைப்பதாகும்; இம்முத்தமிழ் நாட்டின் விடுதலைக்கு ஒத்துழைப்பதாகும்.

இனிக் குயிலுக்கு ஒத்துழைக்கும் புலவருக்கும் எழுத்தாளருக்கும் எமது அன்பு வேண்டுகோள்.

சற்று நினைவு கூர்ந்து, தனித்தமிழிலியே கட்டுரை, பாட்டு எழுதியுதவுக கூடியமட்டும்.

சாதி ஒழிக – தமிழ்நாடு மீள்க என்னும் உயிர் மருந்தே கொள்கையாகக் கொண்டு தமிழர் மானங்காக்கும் பெரியார் இயக்கத்தில் - தி. க. இயக்கத்தில் உண்மைப் பற்றுடையவர்கள் மட்டும் குயிலை - எழுத்தால் - ப… யால் ஆதரித்தால் போதும். அக்கொள்… இனி ஆதரிக்க எண்ணுவாரும் எழுத… எழுத்துக்கள் வரவேற்கப்படும்.

நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ நூறு புல… கள் பாவாணர்கள் பாட்டு எழுதி அனுப்ப… கின்றார்கள், தமிழ் வாழ்க தமிழ்நாடு வெல்க.

ஆயினும் அவை அனைத்தையும் குயிலில் உடனுக்குடன் வெளியிட எப்படி முடியும்? இயலும் அளவு வெளியிடுவோம், இயலும் போது வெளியிடுவோம். பொறுத்தருள்க.

மற்றொன்று:

குயிலின் கொள்கையின் முன்னேற்றத்தை இன்னும் விரைவு படுத்த எண்ணிப் பெரு முயற்சி செய்து உதவலாம் பெரியோர்களும், எழுத்தாளர்களும், குயில் விற்பனையாளர்களும்!

குயிலில் வரும் இசைப் பாடல்கட்கு ஏற்ற இசை அமைத்துப் பாடுகின்ற தெருப்பாடகர் குழுவை ஏற்படுத்தலாம்.

அக்குழுவானது, விடுதலை, குயில், ஈரோட்டுப்பாதை முதலிய ஏடுகளையும், விடுதலை நிலையச் சுவடிகளையும் - அவையில்லாத இடங்களில் இருக்கும்படி செய்யும் ஓர் விளம்பர நிறுவனமாகத் திகழவேண்டும்:

ஆங்காங்குள்ள புகைவண்டி நிலையத்தில், குயிலும் விடுதலை முதலியனவும் விற்கப்பட வேண்டிய வகையில் முயலுவதும் இன்றியமையாது வேண்டப்படும் தொண்டாகும்.

★ ★ ★

புரட்சிக்கவிஞர் எழுதிய,

கற்கண்டு

என்ற நூல் ஒன்று வேண்டும்.

வைத்திருப்பவர் நம் குயிலகத்திற்கு

அனுப்பி உதவுக.

விலைக்குக் கிடைப்பினும் நன்று.

—அமைச்சர்.

யார் சொல் வெல்கவே...

(வேறு)

நேரந் தவறிநான் வேலைக்குச் சென்றதனால்
வேலைக்கு வேண்டாம் நீ நாளைக்கு வா என்று
நாரா யணசாமி ஐயர் நவின்றிடவே
"நாலைந்து பிள்ளைகள் பெண்டாட்டி ஒருத்தி
தாரும்அரை நாள்வேலை சாகா திருப்பதற்கே
என்றுபல வாறு நான் சாற்றவும் அக்கொடியன்
ஊரில்இட மில்லா நேரத்தில் நீங்கள் எலாம்
ஒழிந்தால்தான் என்ன முழுகிப்போம் என்றுரைத்தான்.

எனக்குப்பின் வந்த இரண்டுதடிப் பார்ப்பனர்க்கும்
என்கண் எதிரினிலே வேலைதந்தான். ஒருபுறத்தில்
நினைப்பினிலே ஆழ்ந்தவனாய் நீளப் படுத்துவிட்டேன்
நெஞ்ச நெருப்புக்கு நல்லமழை வந்ததுபோல்
சினக்கும் கடல்ஒலிபோல் சாதி ஒழிகஎன்று
செப்பியது கேட்டேன் பெருங்கூட்டம் நான்கண்டேன்.
இனவெறியைக் கிளப்பிவிடும் இவைகளைத் தில்லி
இன்றே சிறையிலிட வேண்டுமென்று சொல்லி

நாரா யணசாமி நவின்றான் அதேநேரம்
நம்தமிழ் நாட்டை விடுவிப்போம் என்றதொரு
சீரான பேரொலியும் செவிக்கமுதாய்ச் சேர்ந்ததங்கே!
தெருநோக்கி ஓடினேன் ஓடுகையில் என்கையை
நாரா யணசாமி பற்றினான் வேலையைநீ
ஒப்புக் கொள்என்று நவின்றான் என்நிலையதனை
ஆராய்ந்தேன் நாட்டின் அடிமைநிலை ஆராய்ந்தேன்
அழுதனவே என்கண்கள்! சுத்திதூக்கின கைகள்!

சாதி ஒழிக என்றும் தமிழ்நாடு மீள்க என்றும்
தத்தளிக்கும் என்னருமைத் தமிழர் கிளர்ச்சியினை
மோதி அழிக்க எண்ணும் கட்சிகளும் வாழ்வனவோ!
முத்தாகப் பேசிப்பொய் மூட்டைகளை இங்கவிழ்க்கும்
நீதான கட்சிகட்கும் ஆதரவு சேர்வதுண்டோ?
செந்தமிழர் எல்லாரும் ஓர்குலமே! நம்நாடு
போதிய நல்லுரிமை பூணாதா? என்றதை
புழுக்களுக்கும் கட்சிஒன்றா? பெரியார்சொல் வெல்லுகவே!

★

புரட்சியாம்!

கலகப் பகுதியான எகிப்தில் ஒருவாரப் புரட்சியின் முழு வெற்றிக்குப் பிறகு இராக்கியக் குடியரசு அமைக்கப்பட்டுப் புதிதாகக் காசீம் மந்திரிசபை பதவியேற்றிருக்கிறதாம்.

புதிய இராக் சர்க்காரை எதிர்த்து இராக்மக்களும் பட்டாளத்தினரும் புரட்சி செய்யவேண்டுமென்று ஜோர்டான் மன்னர் வேண்டுகோள் விடுத்திருக்கிறாராம்.

புதிய சர்க்காரைக் கம்யூனிசத்தின் கூலிகள் என்றாராம் அவர்!

★

தொடர்கதை...!

அமெரிக்கா தன் படைகளைத் துருக்கியிலும் இறக்கியிருக்கிறதாம். அவைகள் ஏற்கனவே லெபனானில் இறங்கியுள்ள படைகளைப் பலப்படுத்துவதற்காகவாம்! அவைகள் நிறைந்த ஆயுதங்களுடன் மேற்கு ஜெர்மனியிலிருந்து வந்துள்ளனவாம்.

★ ★ ★

துருக்கியின் எல்லைப் பகு[illegible]களில் இன்னின்ன இடங்களி[illegible] ரஷ்யா ராணுவ ஒத்திகை நட[illegible]தும் என்ற குறிப்புகள் சோவிய[illegible] செய்தித் தாட்களில் வெளியா[illegible]யுள்ளனவாம்.

சிறைமீண்ட பெரியார்க்குத்
தில்லையில் வரவேற்பு
நூறுயிரமக்கள் கூடியிருந்தனர்.

29-6-58-ல் சிறை சென்று மீண்ட தமிழர் தலைவரைச் சிதம்பரம் நூறுயிர மக்களால் வரவேற்றது. அந்த வரவேற்பில் ஒரு பகுதியான பெரியார் ஊர்வலமானது என்றும் மறவாத காட்சி.

சப்பரம் (பெருவண்டி) வெண்குருகாக மாறியது. அதன்மேல் பெரியார் ஒளிமுகம், அவர் நாட்டின் தனிப்பெருந் தலைவர் என்று காட்டியது. மின் ஒளி தழைந்த ஊர்தி மக்கள் கடலைக் கிழித்துக் கொண்டு நகர்ந்து சென்றது. பல்லிசை முழக்கம் வானை இடித்தது. வாணம், வெடிகள் அதற்கு அப்பன். மாலை 6 மணிக்குக் கிருட்டினசாமி வீட்டினின்று கிளம்பிய ஊர்வலம் இரவு 8 மணிக்கு விழாப்பந்தலை எட்டியது.

இயக்கப்பாடல்களுக்குப்பின், பாரதிதாசனைத் தலைமை தாங்குமாறு முன்மொழிய – வழிமொழிதலுக்குப் பின் தலைமையுரை தழைந்தது:

"பெரியார் அவர்கட்கு முதற்கண் என் வணக்கம்! தாய்மார்களே, பெரியோர்களே, இன்று மாலை நம்மை மழை அச்சுறுத்தியது நேரு ஆட்சி போல!

நாம் அஞ்சிவிடவில்லை. அதற்கு மாருக வெப்பத்தினின்று விடுதலை அடைந்தோம். இஃது நம் எதிர்கால விடுதலையைக் குறிப்பதாயிருந்தது. நிற்க:

சிறைமீண்ட நம் பெரியார் ஏன் சிறைப்படுத்தப்பட்டார் என்பது உங்கட்குத் தெரியும். அவர்கள் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாகச் சாதி ஒழிந்தால்தான் இந்நாடு உருப்படும் என்று தொண்டாற்றி வருவதும் உங்கட்குத் தெரியும், சாதிக் கோட்பாடு இந்நாட்டில் இருப்பதால் இந்நாட்டு மக்களில் ஒருவர்க்கு என்பதின்றி எல்லோர்க்கும் தீமையும் பழியும் நீங்கப்போவதில்லை என்று பெரியார் எடுத்துக்காட்டி வருவதும் உங்கட்குத் தெரியும்.

உங்கட்குத் தெரியும் உங்கட்குத் தெரியும் என்கின்றேன் ஆயினும் உங்கட்குத் தெரியாதது ஒன்றுதான் உண்டு என்றும் நான் சொல்லப் பின்னிடமாட்டேன். அஃதென்னவெனில்,

நம் பெரியார், கட்சிகளால் மூடப்பட்டிருக்கும் தமிழர் எல்லோருக்கும் பெரியார். எல்லோருக்கும் தந்தை. எல்லோருக்கும் அன்னை என்பது மட்டும் உங்கட்குத் தெரியவில்லை,

அவர் திராவிடர் கழகத்தார்க்கு மட்டுமா உரியவர்? அவரால் திராவிடர் கழகத்தார் மட்டுமா நலன் அடைகின்றார்கள்? இல்லவே இல்லை.

அவர் என்ன சொல்லுகின்றார்?–தமிழர்கள் அனைவரையும் பற்றியுள்ள பழியும் வறுமையும் தொலையவேண்டும் என்று போராடுகின்றார் திராவிடர் கழக மக்களை மட்டும் நோக்கிச் சொல்வதா இச்சொல்?

பெரியோர்களே! தாய்மார்களே!

குடும்பத் தலைவன் தன் குடும்பத்தார்க்கேற்பட்ட பசித் தீத் தணிய இரண்டு மாகாணி அரிசி அளந்து கொடுத்தான். இந்த நிலையில் அவன் தன் குடும்ப நலனைக் கோரியவன் என்றால் பொருந்தும் அவ்வாறன்றி அக் குடும்பத் தலைவன் தொடர்ந்து ஆயிரமூட்டை அரிசியை நாட்டார் அனைவர்க்கும் அளந்துகொண்டே போனானயின் அவன் குடும்ப நலனை மட்டும் கருதினான் என்பது பொருந்தாதன்றோ? அவன் நாட்டின் நலனைக் காத்தவன் ஆனான் அன்றோ!

சாதி ஒழியவேண்டும். தமிழ்நாடு தமிழர்க்கு ஆகவேண்டும் எல்லோரும் வாழவேண்டும் என்பவர் இந்நாட்டில் பெரியாரன்றி வேறு எவர்? அவ்வாறாயின், தமிழர் அனைவர் நலனுக்கும் பாடுபடுபவர் பெரியார் ஒருவரே அன்றோ?

பெரியார் திராவிடர் கழக மக்கட்கு மட்டும் உழைப்பவரா? திராவிடர் அனைவர்க்கும் தமிழர் அனைவர்க்கும் உழைக்கும் தமிழர் தலைவர் அன்றோ? தமிழர் காவலர் அன்றோ! தமிழரின் பன்னூறாண்டின் தவப்பயன் அன்றோ!

நீங்கள் ஏன் ஏமாறவேண்டும்?–அவர் தி. க. கட்சி. நீங்கள் எங்கள் கட்சியிலேயே இருக்க வேண்டும் என்று ஒரு கீழ்மகன் சொன்னால், நீங்களும் உங்களைக் குள்ளமாக்கிக்கொள்ள வேண்டுமா? பெரியார் அவர்களையும் குள்ளமாக்கி விடலாமா?

பெரியார் உண்மைகூறுகின்றார். சாதியில்லை என்பதை விட உண்மைக் கூற்று வேறு எது? சாதியைத் தொலையுங்கள் என்பதைவிட உண்மைத் தொண்டு எது?

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

என்பது வள்ளுவர் வாய்மை! தமிழர்கட்கு ஆன-இவ்வுண்மையை உளமாரச் சொல்லும் பெரியார்க்கன்றோ தமிழ்மக்கள் உள்ளத்தில் எல்லாம் இடம் கிடைக்கும்!

பெரியாரை - அவர் அருங்கொள்கையை ஆதரிப்பதில் கட்சி ஒன்று? அப்படி உங்களைத் தடுத்து நிறுத்தும் கட்சி ஒன்றும் இருக்கிறதா இந்த நாட்டில்?

தாய்மார்களே பெரியோர்களே, எதிரில் நிற்கிறது நம் கடன்! அண்மையில் இருக்கிறது நாம் செய்யத்தக்க அருந் தொண்டு! அதுதான் பெரியாரின் அடிபற்றுவது! அதுதான் இந்நாட்டை மீட்கும் அரும்பணியாகும்.

உங்களை எந்தக் கட்சியும் தடுக்கமுடியாது. ஒன்றுபடவேண்டும். பெரியார் சொல்லுக்காதரவு தருக. அவர் எழுத்துக்காதரவு தருக. அதாவது விடுதலையை எல்லோரும் படிக்க. அவர் நூற்களை அனைவரும் வாங்கிப் படிக்க.

அவர் உடல் அசைவு ஒவ்வொன்றும் உங்களால் பின்பற்றப்பட வேண்டும். அவர் தமக்கென்று மூச்சுவிடவில்லை. அவர் காட்டும் வழி உங்கள் உயிருக்கு உடலுக்குப்பொருளுக்கு ஆக்கம் என்க.''

இவ்வாறு புரட்சிக் கவிஞர் பேசிய பிறகு, வீரமணி பேசினார். அதன்பின் பெரியார் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் உய்யும் வகை உரைத்தருளினார்கள்.

சிதம்பரம் இந்நாள் வரை கண்டிராத பயனுள்ள கூட்டத்தைக் கூட்டிய ஆற்றல் தென்னாற்காடு மாவட்டத் தலைவர் திரு, கிருட்டினசாமிக்கே உரியதென்றால் அது மிகையாகாது.

தோழர் கிருட்டினசாமி அவர்கள் நல்ல தலைவர் சிலருள் சிறந்தவர் என்பது நம் கருத்தாகும்.

தமிழர் நிலை

(தமிழவேள்.)

எண்ணியதைப் பிறர்க்குரைக்க அந்த நாளில்
எழுந்ததுவே மொழியாகும்; அதனை என்றும்
கண்ணெனப்பக் காத்திடுதல், வளர்த்தல் யார்க்கும்.
கடமையெனல் மிகையாகும். ஆனால் இங்குப்
பண்ணெறுத்த தமிழ்மொழியைப் பேணு தற்கும்
பலதுறையில் அதன்வளர்ச்சி காணு தற்கும்
எண்ணத்தில் கரவுடையார் இசையா ராகி
ஏடுகளில் தமிழ்க்கொலையைச் செய்கின் றார்கள்

உயர்தனிச்செம் மொழியாகும் தமிழ்தான் என்ற
உண்மையினை மறைத்தற்குத் தம்மா லான
செயல்பலவும் செய்கின்றார்; ஆங்கி லச்சொல்
சேர்த்ததனைப் பேசிமகிழ் வெய்து கின்றார்
அயல்மொழியாம் வடமொழியை அளவில் லாமல்
அடுக்கடுக்காய் இடையிடையே தொடுத்துப் பேசி
நயம்பயக்கக் கூறியதாய் மகிழ்கின் றார்கள்
நாடறிய ஏடெழுதிக் குவிக்கின் றார்கள்

'மோட்டார்கார் பவுடர்சோப்' போன்ற சொற்கள்
மொழிக்கழகு தருவனவாய் எண்ணி, இந்த
நாட்டார்கள் மெச்சிடவே கதைக்கின் றார்கள்
நற்றமிழின் வளர்ச்சியென உரைக்கின் றார்கள்
பாட்டாகப் பாடுகின்றார் தெலுங்குப் பாட்டை!
பலதுறையும் முன்னேற்றம் நாடும் மேலை
நாட்டார்கள் கண்டபுது சொற்கட் கெல்லாம்
நந்தமிழில் சொல்லில்லை என்கின் றார்கள்.

ஏனில்லை என்றவரைக் கேட்பா ரில்லை!
இருக்கின்ற ஆங்கிலச்சொல் எல்லாம் அந்நாள்
நானிலத்தில் இருந்தனவா? வடசொல் நீக்கின்
நல்லதமிழ் வாழாதா? கலைச்சொல் லாக்கம்
தேனனைய தமிழ்மொழியில் செய்தால் அந்தத்
தீங்குள்ளம் படைத்தார்போக் கொழிந்தி டாதா?
ஏனிதனை நந்தமிழர் உணர்த லின்றி
இருக்கின்றார், உணரும்நாள் வருக இன்றே!

எங்கே போவார்!

26-6-58 அன்று மன்னார்குடிக்கருகே உள்ள காலக ஆற்றுப் புதுப்பாலத் திறப்புவிழாவில் குன்னியூர், சாம்பசிவ ஐயர் தலைமைஏற்றுப் பேசுகையில் "நான் காங்கிரசிலிருந்து விலகிவிட்டதாகச் சிலர் பேசி வருகிறார்கள். காங்கிரசைவிட்டு விலகி வேறு எங்கே போகமுடியும்" என்று கூறினர்.

கண்டுபிடிப்பு

"பரீட்சையில் மாணவர்கள் 100-க்கு 25க்கு மேல் "காப்பி" அடித்தால் அவர்கள் கற்ற கல்லூரித் தலைமையாசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஆந்திர சட்டசபையில் நிதிமந்திரி கூறினர்.

இது செய்தி

உலகத்தொழில் நுணுக்கக் கண்காட்சி 1960ல் சென்னையில் நடைபெறும். அதை நடத்துவதற்குத் தென்னிந்திய வியாபாரிகள் சங்கம் முத்தைய செட்டியார் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறது.

—★▭★—

கைத்தொழில் மன்னராகிய ராமகிருஷ்ண டால்மியா மீதுள்ள இன்சூரன்ஸ் பணமோசடி வழக்கில் குற்றங்களைத் தெளிவுபடுத்த அரசாங்க வக்கில் ஜோசிபட் வாதாடினர்.

மோசடித் தொகை 2 கோடியே 85 லட்சமாம் வழக்கு விசாரணை தொடர்நது நடக்கிறது.

—★○★—

வர்த்தக சபையின் வருடாந்திர மாநாட்டுக்குத் தலைமைவகித்த ஹாஜாஷெரீப் "சென்னை பெரிய தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் பிறபகுதிகளை விடப் பின்தங்கியுள்ளது ஆகவே பெரிய தொழிற்சாலைகளை யமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும். விற்பனை வரியைக் குறைக்க வேண்டும்" என்று கூறினர்.

சர்வதேசக் தொழிலாளர் மாநாட்டுக்கு (ஜீனிவா) சென்றுவந்த சென்னைத் தொழில்மந்திரி ஆர். வெங்கட்ராமன் சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதுபற்றி சென்னை-டெல்லி அரசுகளுக்கு அறிக்கை கொடுப்பாராம்.

அதற்காக பிரான்சும் — இத்தாலியும் ஒத்துழைக்க முன்வருகின்றனவாம்!

அதன் அமைப்புப்பற்றியமுடிவை டெல்லிஅரசு தான் செய்யவேண்டுமாம்.

—★▭★—

அன்னாய்! வாழ்க!

(இ. பட்டாபிராமன்)

"கண்ணே! மணியே! கனியே! தேனே!
பொன்னே! பூவே பொற்பே! கிள்ளாய்!
மதுவே! வண்டே! மயிலே குயிலே!
மதியே! மீனே! மானே! பனியே!
அன்பே!" என்றெலாம் அழைத்துப் பார்த்தேன்
இன்பே இல்லை தமிழே! உன்னை
அன்னையே என்றுநான் அழைக்கும் போதினில்
மன்னுபே ரின்பால் மனமுடல் சிலிர்த்தன;
அத்தகு சிறப்புடை முத்தமித் தாயே!
மாசுடை வடவர் நின்னை மாய்த்திடப்
பேசித் திரிகிருர்; பெரும்பொருள் இறைக்கிருர்;
எண்ணிலா முயற்சிகள் செய்கிருர்; எழிலில்
பன்மடங் குனக்குத் தாழ்ந்த பாவையாம்
இந்தியை அரியணை ஏற்றிடத் துடிக்கிருர்;
மந்திப் பிடியர் மதம்ஒழித் திடத்தமிழ்ப்
பெரியார் கவிஞர் அறிஞர் பலரும்
உரியதோர் திட்டம் உடனே வகுத்திடக்
காத்திருக் கின்றனர் கலக்கம் நீக்குக
மாத்திரு நாட்டை மாண்பொடு மீட்டுப்
பாரெலாம் உலவிய பைந்தமி ழம்மே!
சீருடன் முடியைநின் சென்னியில் சூட்டி
இன்புடன் ஆடுவோம்; ஈடில் பண்கள்
அன்புடன் பாடுவோம்; அன்னாய்! வாழ்கவே!

—★○★—

மில் துணி வரி

டெல்லி அரசு மில் துணிகளுக்குப் போடும் வரியைக் குறைத்துள்ளது.

வடநாட்டு மில்களில் தேங்கிக் கிடக்கும் துணிகள் விலையாவதற்காக இச் சலுகையாம்.

நடுத்திர, முரட்டு ரகத் துணிகளுக்கு வரிலயக் குறைத்து மெல்லிய துணிகளுக்குச சற்று உயர்த்தியிருக்கிறார்கள்.

இன்றுள்ள நிலையில் சீனவைப் போல இந்தியாவிலும் உள்நாட்டுப்போர் ஏற்படும் என்று அண்மையில் சில சொற்பொழிவுகளில் கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாட் கூறியதாக செய்திகள் வெளிவந்தன அதுபற்றி நேருவும்-பாட்டும் "நீண்ட" கடிதங்கள் பரிமாறிக் கொண்டனராம்.

கண்டு மிரளுகிருர் நேரு, கரடியை விடுத்திருக்கிருர் தோழர் "பாட்".

கேரளாவைப் பார்...?

பஞ்சம், பசி, பட்டினி என்றெல்லாம் வாடும் பாட்டாளி மக்களே ரஷ்யாவைப் பாருங்கள், படித்துப் பட்டம் பெற்றும் வேலையின்றி அலையும் அருமை இளைஞர்களே சைனாவைப் பாருங்கள், காலமெலாம் ஆலையிலே காலொடியப் பாடுபடும் தொழிலாளத் தோழர்களே செக்கோஸ்லாவாகியாவைப் பாருங்கள், என எடுத்ததற்கெல்லாம் அங்கே பாருங்கள், இங்கே பாருங்கள் என்று பேசி வந்த பொதுவுடைமைத் தோழர்கள், கடந்த பொதுத் தேர்தலுக்குப்பின், கேரளாவைப் பாருங்கள், கேரளாவைப் பாருங்கள் என்று மேடை தோறும் முழங்கி வந்தனர் – முழங்கியும் வருகின்றனர் – இப்படி அவர்கள் முழங்கும் போதெல்லாம் பொதுவுடைமையினரின் ஆட்சியில்மக்களுக்கு விளையும் நன்மைகளைக் குறிக்கத்தான் இவ்வாறு கூறுகின்றனர் போலும் எனப் பெரும்பாலோர் எண்ணினர். ஆனால் உண்மை அதுவன்று.

பிரச்சனைகளைக் காலவரையறையின்றிக் குழப்பிக் குட்டிச்சுவராக்குவது எப்படி. அடுத்தவர்களைக் கெடுப்பது எப்படி அதற்கெனக் கையாளப்படும் வழிகள் யாவை என்பதை நாம் அறிந்து கொள்ளத்தான் அவர்கள் இவ்வாறு கூறி வருகிறார்கள் என்பது பரம்பிக்குளம் ஆற்று நீர் சம்பந்தமாக அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகளிலிருந்து தெரியவருகிறது.

உலகத்திலுள்ள பொதுவுடைமை நாடுகள் ஏனைய பொதுவுடைமையல்லாத நாடுகளிடம் எந்த முறையில் நடந்துகொள்ளுமோ அதே முறையில் காங்கிரஸ் ஆட்சிக்குட்பட்டிருக்கும் தமிழகத்திடமும் பரம்பிக்குளம் பிரச்சனையில் நடந்துகொள்ளுகிறார் நம்பூதிரிபாட். உண்மையில் அவருக்கு நல்லெண்ணமும், பொதுநோக்கும் இருக்குமானால், பரம்பிக்குளம் ஆற்றில் தமிழக அரசினர் கட்டவிருக்கும் அணைக் கட்டுத் திட்டத்திற்கு ஆதரவளித்து நிறைவேற்றி வைத்திருப்பார். ஆனால் இதற்கு முற்றிலும் நேர் மாறான கருத்தைக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தான் இப்பிரச்சனையின் தொடக்ககாலத்தில் கேரள மாநிலப் பொதுவுடைமையினர் பரம்பிக்குளம் ஆற்றின் குறுக்கே அணை கட்டவிடமாட்டோம் என்று கதறினர். இதற்குஅவர்கள் கூறும்காரணம், அணைக் கட்டினால் இப்போது நடைபெற்று வரும் படகு போக்குவரத்துத் தடைபடும் என்பதாகும். படகு போக்குவரத்து என்றதும் ஏதோ திருச்சிக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையே நடைபெறும் போக்குவரத்து என்றோ, லட்சக்கணக்கான ரூபாய்களை வருவாயாகத் தேடித்தரும் படகு போக்குவரத்து என்றோ எண்ணிவிட வேண்டாம். இப்படகு போக்குவரத்தினால் கேரள மாநிலத்திற்கு விளையும் பயன் மிகவும் குறைவு. மேலும் இவ்வணை கட்டி முடிக்கப்பட்டால இதனால் கேரளம் அடையவிருக்கும் மின்வசதியை ஒப்புநோக்க, இவ்விழப்பு ஒரு சிறு துரும்புக்கு நிகரானது என்றே கூறலாம். எனினும் நம்பூதிரிபாட்டுகள் இத்திட்டத்தை ஏற்க மனமில்லாதவர்களாய் நேரடியாக– எதிர்க்கத்துணிவின்றி – இப்பிரச்சனையில் நியாயமான தீர்வுகாண உயர்நீதி மன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்று கூறுகின்றனர்.

தமிழகத்தில் பிறந்து தமிழ்மண்ணைக் கடந்து மலையாள மாநிலத்தின் வழியாக ஓடும் இவ்வாற்று நீர் இன்று யாருக்கும் பயன்படாமல் அரபிக்கடலில் கலப்பதைப் பற்றிச் சிந்திக்க மறுக்கின்றனர்.

அறிவை அடியோடு மாஸ்கோவிற்கு அடகு வைத்து விட்டு வறட்டுத் தத்துவம் பேசுவோரல் கோவை மாவட்டத்தில் மூன்று லட்சம் ஏக்கருக்குக் கிடைக்கும் நீர்ப்பாசன வசதியையும் ஒன்றரை லட்சம் கிலோவாட்டிற்கும் சற்று அதிக மாகக் கிடைக்கும் மின் வசதியையும் தமிழகம் இழக்க வேண்டி வருகிறது.

தமிழகத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை லட்சம் டன் அரிசியை உரிமையோடு அள்ளிப்போகும் மலையாளிகள் இப்பிரச்சனையில் விடாப்பிடியாக நிற்பதை எண்ணுந்தோறும் உள்ளம் குமுறுகிறது.

இது சம்பந்தமாக நம்பூதிரிகளைத் தட்டிக் கேட்க இங்குள்ள ஜீவானந்தங்கட்கும் இராமமூர்த்தி கட்கும்தான் பயமென்றால் நமக்கு அமைந்த மந்திரிகள் இவர்களைவிடக் கேவலமாக – மட்டமாக – நடந்து கொள்கிறார்கள்.

மலையாளிகளின் கொட்டத்தை அறிந்தும், தமிழகத்து அரிசியை மலையாளிகள் எடுத்துப் போவதால் குடியாமுழுகிப் போய் விடும் என்று கேட்கிறார் பத்து லட்சம் பக்தவத்சலம் – தமிழகத்தின் இன்றைய நிலையை எண்ணும் போது "இங்குன் நாட்டுக்கு இழி கழுதை ஆட்சியா?" என்ற கவிதை வரிதான் நினைவிற்கு வருகிறது.

–மணி

கொற்றமிக வாழ்க குயில்!

— முதுகண்ணன் —

வண்டமிழர் நாகரிக மாண்பெல்லாம் தன்னிசையிற்
கொண்டு தமிழகமாங் கோதில்சீர் தண்பொழிற்கண்
மேவுகவே மாத்தமிழின் மீப்புகழாம் பண்பாடிக்
கூவுகவே வண்பூங் குயில்!

இலக்கியப்பூஞ் சோலே யெழின்மிகநன் கேய்ந்தே
இலக்கணமாஞ் செவ்வியுநன் கெய்தி – நலக்குறிக்கோள்
வண்டமிழப் பாவால் வழுத்துகின்ற பூங்குயிலே
எண்டிசையுங் கூவா யினி.

கொள்பொருளே இல்லாக் குருடர் மொழிகளிலே
உள்ளங் கொடுத்திடுமுள் ளீடில்லார் – பிள்ளைமதிப்
போக்கித் தமிழனையின் பொன்னடிக்கே சேர்ப்பிக்கும்
மாக்குயிலே கூவாய் வளம்.

புழுத்து நௌிந்து புலானாறு கின்ற
பழுத்த மதம்பிடித்தார் பக்கல் – விழுத்தகுசீர்
பாடித் திகழ்ந்துலவும் பைந்தமிழப் பூங்குயிலே!
நீடித் தறம்வளர்ப்பாய் நின்று.

மூடப்பழக்கம் வெருண்டோட முத்தமிழாற்
பாடித் தமிழுணர்த்தும் பைங்குயிலே – ஆடு
மயிலனையார் நாணு மகிழிசையாற் கூவித்
துயிலனையார் சோம்பல் தெளி.

நாகரிக நாடெல்லா நன்கறிய நல்கியசீர்
நாகரிக நாட்டினிலே வேற்றவரின் – நாகரிகம்
பற்றமனம் பற்றாத பண்பார் பெரியார்க்குக்
கொற்றமிக வாழ்க குயில்!

❀❀❀

பற்று!

பரம்பிக்குளம் தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குத் திருப்பி விடுவது கேரளாவின் நலனுக்கு உகந்த தல்லவாம்.

–இதனை மாநாடு கூட்டித் தெரிவித்திருக்கிறார்கள்! சாதாரண மாநாடு அல்ல – சர்வகட்சி மாநாடு.

தகராறு கிளம்பினால் நீதி மன்ற முடிவுக்கு விடப்படுமாம்!

தெளிவாகிறது!

தினமணி தலையங்கம்
(சென்னை 3—7—58 வியாழன்)

... கேரளத்தில் சாலக்குடித் தொகுதியில் அடுத்த படியாக ஒரு உபதேர்தல் நடைபெற விருக்கிறது. பரம்பைக் குளம் நதிக்குக் கேரளத்தில் சாலக்குடி யாறு என்ற பெயரும் உண்டு. இந்த உபதேர்தலில் எதிர்க் கட்சியின் பிரசாரம் தமக்குப் பாதகமாகிவிடக்கூடாது என்று காங்கிரசாரும், கம்யூனிஸ்டு களும் கவலைப் படுகின்றனர். ஆகையால்தான் (பரம்பைக் குளம் நீரைத் தமிழ் நாட்டுக்கு விடுவது பற்றிக் கேரள சர்க்கார் கூட்டிய) சர்வகட்சி ஆலோசனைக்குக்காங்கிரஸ் வரவில்லை. அதுவரா தநிலையில் தான் பொறுப்பேற்று எதையும் செய்ய ஆளும் கட்சி விரும்பவில்லை...

சாவாத உழவன்

வெயிலில் உழவன் வியர்க்க உழுதிடும்
வயல்அயல் மரத்து நிழலும் சுட்டதால்
குளிர்பொருத்து கூடம் சென்றுபின் மாலைஅவ்
வயலிடை வந்தேன் உழவன்
உயிரோ டின்னும் உழுகின்றானே!

எழுத்தாளர்க்கு...

தமிழ், தமிழர், தமிழ்நாடு முன்னேற்றம் பற்றிய சீரிய கருத்துக்களைக் கொண்ட எளிய இனிய கவிதை கதை கட்டுரைகளை நம் குயிலுக்கு எழுதுக.

எழுதுவனவற்றைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெறுதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சசற்றலைகள் அனுப்ப வேண்டும்.

★ ★ ★

விற்பனையாளர்க்கு...

விற்பனை விண்ணப்ப விதிகளில் கண்டுள்ள படி தேவையான இதழ்கட்குரிய முன்பண மின்றிக் "குயில்" இதழ்கள் அனுப்பப்பட மாட்டா.

கூடுதலான இதழ்கள் வேண்டுவோர் இதை நோக்கித் தேவையான இதழ்கட்குரிய முன்பணம் அனுப்புக.

விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தனுப்பா மலும், அனுப்பிப் பணமனுப்பாமலும் இருப் போர்க்கு இதழ்கள் அனுப்பப்படுவதில்லை.

"குயில்" இதழ்கள் நன்றாகப் பார்வை யிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாகமுடியாது.

குயிலகத்துக்கு அனுப்பும் தொகையைப் பணவிடை (M. O.) மூலம் மட்டுமே அனுப்பி அதன் இரசீதையும் அனுப்பவேண்டும்.

செக்முதலானவை ஏற்றுக் கொள்ளப் படமாட்டா.

நினைவுறுத்துகிறோம்!

குயிலில் பிறரால் எழுதப் படும் பாட்டு உரைநடைக்கு அவரின் புனை பெயர் இட் டிருக்கும். ஆசிரியரால் எழுதப்படுவன வற்றிற் குப் புனைபெயரோ இயற் பெயரோ இரா.

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

★ ★ ★

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு

முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக.

சாதியின் தோற்றுவாய்

(தஞ்சை, மருதவாணன்.)

தீமையை அழிக்க முற்படும்போது, அச்செயலைத்தடுப்பவர். அத் தீமையால் பயன்பெறுபவராகவோ, அன்றி அத்தீமையை உண்டாக்கியவராகவோ, இருத்தல் வேண்டும். இது அனைவரும் அறிந்த உண்மை. சாதி ஒழியவேண்டும். ''எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்'' என்ற செந்நெறி தழைக்க வேண்டும் என்று எண்ணிச் செயலாற்றுபவர்களைக் குறைகூறுபவர்களும், அச் செயல் சரியன்று என வாதிட வருபவர்களும், யாராயிருத்தல் வேண்டும்? பார்ப்பனராகவோ, அன்றிப் பார்ப்பன அடிவருடிகளாகவோ மட்டுமே இருத்தல் வேண்டும்!

இத்தகைய 'அடிவருடிகள்'தாம் சாதி ஒழிப்பாளர்களைப் பார்த்துக் கேட்கிறார்கள்: "சாதிக்கும் பார்ப்பனர்க்கும் என்ன தொடர்பு? பூணூலிலும், உச்சிக்குடுமியிலுமா சாதி? எதற்கெடுப்பினும் பார்ப்பான்தானா? என்று. பார்ப்பனனின் கடைக்கண்வீச்சுக்காகவும், அவனாற்பெறும் சிறுபயன்களுக்காகவும், மென்று உமிழ்ந்த எலும்புத் துண்டுகளுக்காக, வாலைக் குழைத்துக்கொண்டு செல்லும் நாய்களைப்போலத் தம்சொந்த இனத்தானை – தம்தோழனைக் காட்டிக்கொடுக்கும் தன்மையிற் பேசித்திரிகிறார்கள், இவர்கள்! தூங்குவது போல் நடிக்கும் ஒருவனை எழுப்பல், எவ்வாறு இயலாதோ அவ்வாறு இவர்கட்கு எவ்வளவு கூறினாலும் பயனில்லை. இருப்பினும் தமிழ்ப்பெரு மக்கள் உய்த்துணர ஈண்டுச் சில கூறுகின்றேன், சாதியின் தோற்றுவாய் எது? சாதி ஒழிப்புக்குத் தடை யார்? என்னும் இவ்விரண்டுமே ஈண்டு விளக்கத்திற் குரியவை.

வரலாற்றுச் சான்றோடும், நிகழ்கால அனுபவத்தோடும் ஆராய்வார்க்குச் சாதியின் தோற்றுவாய், ''பார்ப்பனரின் சூழ்ச்சி'' என்பது தெளிவாகப் புலப்படும். சில விபீடணர்களும், புருடசுகளும், உரூதாசுகளும், தன்னலங்கருதி இவ்வுண்மையை மறைத்தாலும், வரலாற்றுப் பகலவன் உண்மை எனும் ஒளிக்கற்றையால் தெளிவுறக் காட்டிவிடுகிறான். பின்வரும் மேற்கோள்கள் 'பார்ப்பனர் சூழ்ச்சியின்' விளைவு சாதி என்பதை விளக்கும். ''சாதிமுறை பார்ப்பனீயத்தால் ஏற்பட்ட ஒன்று. சாதிமுறையின் மையநிலை பார்ப்பனனுவான். மூவாயிரம் ஆண்டுகட்குமுன் ஏற்பட்ட இம்முறை இன்றளவும் இந்து மதத்தினரிடையில் இருந்து வருகிறது'' (நெல்சன் என்ஸைக்ளோபீடியா. பகுதி. 5. பக்கம் 287) ''சாதிமுறை பார்ப்பனர்களால் தங்கள் இனத்தூய்மையை நிலைநாட்ட அமைக்கப்பட்டது'' (இந்துமதப் பழக்கங்களும் வழிகளும்'' ஆங்கிலநூல் பக்கம் 11. பி. தாமசு. எழுதியது.) ஆரியர் தெனாடடைந்து தமிழருடன் கலந்துறைந்தஞான்று, ஆரியக்கொள்கைகள் பல தமிழகத்தில் நிலைத்தன. அதனால் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் எனப்பிரிவுகள் உண்டாயின ('தமிழகம்' ந. சி. கந்தையாபிள்ளை. பக்கம் 166) நூற்றிருபது அடிகள் தொலைவில் ஒரு தாழ்ந்தகுலத்தவன் வந்தாலும் ஆரியர்க்கு அதனால் தூய்மை கெட்டுவிடுமாம் (ஆடான்சு என்சைக்ளோ பீடியா பக்கம் 179) இவைமட்டுமன்று; தமிழ்க்கடல் மறைமலையடிகள் முதற்கொண்டு, எண்ணிறந்த பிற நாட்டு அறிஞர்கள் ஈறாக இக் கருத்துக்களையே கூறியிருக்கிறார்கள். விரிவஞ்சி விடுத்தேன்.

சாதியின் தோற்றுவாயை அறிய ஒரு மறைமுக வழியும் உண்டு. அதுதான் சாதி ஒழிப்பைத் தடுப்பவர் யார்? என்பதை அறிவது. சாதி ஒழிப்பை எதிர்ப்பவர் இந்நாளில் பார்ப்பனரும் அவர்தம் அடிவருடிகளும் ஆவார்கள். பின்னவரான அடிவருடிகள் கூறுகிறார்கள். -சாதியைப் பார்ப்பனரே உண்டாக்கியதாக இருக்கட்டுமே! அதற்காக இற்றைநாள் பார்ப்பனர் என்செய்வர்? என்று. அந்நாளில் சாதிமுறையைப் புகுத்திய ஆரியர் பரம்பரையினராகிய இந்நாள் பார்ப்பனர்களும் சாதி வெறிகொண்டு சாதி ஒழிப்புக்குத் தடையாய் இருக்கிறார்கள் என்றுதான் நான் தக்க அகச்சான்றுகளுடன் கூறுகிறேன். இந்நாளில் நேரிற்காண்பதென்ன? ஆரியரின் தனி உயர்வுநாடும் தன்மையும் அலுவலகங்களில் அவர்தம் கூட்டமும், ஆரியச்சேரிகளும், இன்றளவும் ஒழிந்தனவா?

மறைமலையடிகளார் அவர்கள் தாமெழுதிய "சிந்தனைக் கட்டுரைகள்" எனும் நூலைக் கல்லூரி இடைநிலை வகுப்புக்குப் பாடமாக வைக்கவேண்டி அதனைச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினார். நூலை அனுப்பிப் பல ஆண்டுகளாகியும் அதனைப் பல்கலைக்கழகம் ஏறெடுத்தும் பார்க்க

வில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா? பல்கலைக் கழகத்தின் இயக்குநர் குழுவின் பெரும்பகுதி பார்ப்பனர்களேயே கொண்டிருந்தது இவ்வாறு மறைமலையடிகளாரே அந்நூலின் முகவுரையில் எழுதுகிருர். தமிழ்க்கடல் மறைமலையடிகளாரின் அரிய இந்நூல் பாடநூலாகும் வாய்ப்பை இழக்கச் செய்து விட்ட இச் செயல் எந்தக் காலத்துப் பார்ப்பனர்களால் செய்யப்பட்டது?

"சாதியால் நன்மையே! [இந்தத் தலைப்பில் கட்டுரையை எழுதியவர் டி. ராமராவ் என்பவர். "மஞ்சரி" மார்ச் இதழ். மூலம், 4—1—58 பைஸ் பஜார். டில்லி] சாதி ஒழியக்கூடாது என்று இப் பார்ப்பனர் கூறுகிருர்; அந்தக் காலத்தில் அல்ல; இந்த ஐம்பத்தெட்டாம் ஆண்டில்! சாதியைச் சமுதாயப் பொருளாதார வாழ்விலிருந்து எவராலும் நீக்கிவிட முடியாது, சாதி இருந்தபோதிலும் ஒரு நாடு சிறப்பாக வாழமுடியும் ["ஒரு இந்து" எனக் குறிப்பிடும் இப் பார்ப்பனர், 24-5-58 "சண்டே டைம்ஸ்" ஆங்கில இதழ் பக்கம் 5-ல் இவ்வாறு எழுதுகிருர்] பல்வேறு மொழிகள் இந்திய விடுதலைக்குத் தடை விளைவிக்கவில்லை; பல்வேறு மதங்கள் நம்நாட்டு ஒற்றுமையைக் குலைத்துவிடவில்லை. வெவ்வேருக இருக்கின்றனவே என்று, இந்து, முஸ்லீம், கிருத்துவம், ஆகிய மதங்களை நாம் ஒன்ருக இணைத்துவிடவில்லை இதே முறையை 'சாதி'யிலும் ஏன் பின்பற்றக்கூடாது? சாதிமட்டும் ஏன் ஒழியவேண்டும்? ["சுயராஜ்யா" டிசம்பர் 14, பக்கம் 3. 1957-ம் ஆண்டு ராஜாஜி எழுதியதாக 'விக்னேஸ்வரா' மேற்கோள் காட்டுகிருர்] இவையெல்லாம் எந்தக்காலத்துப் பார்ப்பனர் கூற்றுகள்? வினுவிடுக்கும் வெற்றுத்தலைகள் இதனை உணர்க!

இறுதியாக, மீண்டும் நினைவில் நிறுத்திக் கொள்க! சாதியின் தோற்றுவாய் 'பார்ப்பனர் சூழ்ச்சி'யாகும். சாதி ஒழிப்புக்குத்தடை, பார்ப்பனர்களும் அடிவருடிகளுமாவர். தமிழர் முன் நிற்கும் கடனே, 'சாதி ஒழிப்பு'! சாதிஒழிப்பை உயிரெனக்கொண்ட தனித்தமிழர்கள் அதற்குத் தடையாய் இருப்பவர்களை என்னசெய்யப் போகிருர்கள்? அதோ! "சாதி இருக்கின்றதென் பானும் இருக்கின்ருனே"! என்ற ஒலி முழக்கம் கேட்கிறது!

சுனை நடுவே..!

ஆ. துரைக்கண்ணன்.

செறிதரு மாமலைச் சாரலிலே
செங்கழு நீர்மலர்ச் சுனையுண்டு;
வெறியுறு காலைப் பொற்கதிரான்
விரைத்தா மரைமல ரிதழ்விரிக்கும்;
நறுமலர் விரிமென் பாயலிலே
நாடி நல்லன்னந் துயில்கொள்ளும்;
உறுமலர் நோக்கி ஒலிவண்டும்
உள்தேன் கொள்ளச் சிறகடிக்கும்.

பொன்னிதழ்ப் பூமல ருட்புறத்தே
புள்துயில் நிலையாற் கருவண்டு
மின்னொலி விடுத்துப் பேரொலியை
மிகவே கிளப்பும் வெகுளியொடு;
மன்னிய நீள்துயில் நீத்தமையான்
மாற்றுய ரன்னம் நீர்குதிக்கும்;
கன்னல் மொழியிசைக் களிவண்டும்
கமலப் பூவோ[டு] உறவாடும்.

கார்கொண் டல்நிறக் கருவண்டு
கள்ளூறு தாமரை நன்மலரை
வேர்ப்பலாச் சுளையெனச் சுவைத்துவக்கும்
விருந்தெழிற் காட்சி கண்டுடனே
ஆர்வெள் ளன்னஞ் சினங்கொண்டே
அசைத்திடத் தாமரைத் தண்டதனே.
ஊர்வரி வண்டும் உயரெழும்பும்
உந்தும் உணர்ச்சிப் பண்ணேடே!

"பிசிராந்தையார்"

புரட்சிக் கவிஞரின்

உரைநடை நாடகம்

அடுத்த இதழ் முதல் வரும்.

ஃ பழம் நழுவிப் பாலில் விழுந்தது ஃ

மாலை ஐந்தரை மணிக்கு மகளிர்கழகம் மகளிரால் நிறைந்தது.

தலைவி தங்கம் சொற்பொழிவு மன்றத்தைத் துவக்கஞ் செய்தாள்.

அஞ்சிலை அறம் இன்னதென்று சொற் பெருக்காற்றினாள்.

மற்றவர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர் அவர்களின் தாமரைக் கைகள் ஒலி செய்தன.

தலைவி, தங்கம் முடிவுரை சாற்றுங்கால் அஞ்சிலையின் அறவுரை அரிதென்று போற்றினாள். அனைவர் பேராலும் நன்றியும் அறிவித்தாள்.

அதன் பின்னர்,

ஒருபால் மகளிர்சிலர் ஆடல் பயின்றனர்;
ஒருபால் மகளிர்சிலர் பாடல் பயின்றனர்
கதைகள் பேசிக் களித்தனர் சிற்சிலர்.
வீட்டுக் கதைகள் விளைத்தனர் சிற்சிலர்.

இவ்வாறு ஒருமணிநேரம் சென்றது. ஆறரைமணி ஆயிற்றென்று, பொன்னி சிற்றுணவு பரிமாறிச் சிரித்து நின்றாள். மயில்களும் குயில்களும், மான்களும், கிளிகளும், வரிசையில் குந்தின என்ன, மகளிர் அனைவரும் வரிசையிற் குந்தி உண்ணலானார்.

மல்லிகை சொன்னாள்: மறுநாள் பாஞ்சாலி திருமணத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறும் என்று.

இந்தப் பேச்சு எடுக்கவில்லை.

அஞ்சிலை சொன்னாள்: நாளைக்கு அமாவாசையாதலால் கடலிற் குளிக்கலாமா என்று. சுறுமீன் தொல்லை ஆதலால் வீட்டில் குளிப்பது மிகநன்று என்றாள் பச்சையம்மாள். இவ்வாறே பலர் பல சொன்னார்கள் ஆனால் ஒருமுகம் நட்டபடி இருந்தது. அங்கயற்கண்ணி, ஏன் அழவும் இல்லை சிரிக்கவும் இல்லை, பேசவுமில்லை பாடவுமில்லை என்று முத்தம்மாள் கேட்டாள்.

அனைவரும் அந்தக்கேள்வியையே கேட்கலாயினர்.

அங்கயற்கண்ணி உதடுகள் புன்சிரிப்பைச் செய்தன.

அவள் சில சொற்களால் பெரியதொரு செய்தியை வெளியிட்டாள்:

"நாழிகை ஆகிறது! என் காதலர் காத்திருப்பார்! எனக்காக."

நேற்றும் இப்படிச்சொன்னாள் அங்கயற்கண்ணி! முந்தாநாளும் இப்படிச் சொன்னாள் அங்கயற்கண்ணி!

இது மட்டு மன்று,

அங்கயற்கண்ணி உள்ளம் அயலெதிலும் செல்லவே இல்லை. அவள்மேல் உயிர் வைத்திருக்கும் ஒருவன்மேல் தன் உயிரை வைத்துவிட்டாள் என்று மகளிர் அனைவரும் சொல்லிக்கொண்டார்கள். தலைவி கழகம் முடிந்தது என்றாள்.

அங்கயற்கண்ணி காதலர் கருத்துக்கு விருந்து செய்ய விரைந்து செல்லுக என்றனர் அனைவரும்.

அங்கயற்கண்ணி அகன்றாள் அழகைச் சுமந்தபடி!

அங்கயற்கண்ணி போய்விட்டாள்; அனைவரும் போய்விட்டார்கள். அஞ்சிலையும் மல்லிகையும் போகவில்லை.

அஞ்சிலை மல்லிகையிடம் ஒருமூட்டையை அவிழ்த்தாள். அங்கயற்கண்ணி நாள்தோறும் காதலர், காதலர் என்று கதைக்கிறாள் அவள் பேச்சில் மெய்யும் இருக்குமோ!

மல்லிகை சொன்னாள்: அங்கயற்கண்ணி ஒரு தற்பெருமைக் காரி.

அஞ்சிலை:— இன்றைக்காவது அவள் சொல்லின் உண்மையைக் கண்டறியலாமா?

மல்லிகை :— நான் பின் தொடர்கின்றேன். நீ இங்கேயே இரு!

புகைவண்டி நிலையத்தில் விற்பனை நூல் நிலையம் அழகாகக் காட்சி அளித்தது. பலர் நூல்களும், ஏடுகளும் வாங்கிச் சென்றார்கள். ஓர் அழகிய இளைஞன், சுவடி ஒன்றைத் திறந்து நின்றபடி படித்துக் கொண்டிருந்தான்.

நூல்நிலையத்திற்குச் சிறிது தொலைவில் அங்கயற்கண்ணி முல்லைச்செண்டு விலை பேசிக் கொண்டிருந்தாள். மல்லிகை அங்கு வந்து சேர்ந்தாள். அங்கயற்கண்ணிக்காகக் காத்துக் கொண்டிருக்கும் காதலன் யார்?—அவள் கண்கள் நாற்புறமும் தேடின.

அவன் சுவடியிற் கண்ணையும் கருத்தையும் செலுத்தி நின்றிருந்தான். அவள் முல்லை விலை தீர்த்து வாங்கி, வரவேண்டிய புகைவண்டிமேற் கண்ணையும் கருத்தையும் செலுத்தி நின்றிருந்தாள்.

மல்லிகையின் உள்ளம் பிழையாக ஒரு முடிவுக்கு வந்தது. அவனுக்காகத்தான் அங்கயற்கண்ணி காத்திருக்கின்றாள் என்று.

மல்லிகைக்கு இரக்கம் வந்தது. அவள் தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்:

அவன் அழகை அவள் அடையத் தவங்கிடக்கின்றாள் ஆதலால் கொடியிடையால் மார்பைச் சுமந்து நின்று வருந்திக் காத்துக்கொண்டிருக்கின்றாள்.

அவன் மேலும் பிழையில்லை. கிடைக்கரிய கிள்ளையை மறக்கவைத்தது அவன் !சுமக்கும் தமிழிலக்கியமேயாகும்.

மல்லிகை விர்ரென்று அவன் அண்டையிற் போய் நின்றாள். அப்போதும் அவன் நிமிர்ந்தானில்லை.

உனக்காக உன்காதலி அதோ எந்நேரம் காத்திருப்பாள்?—என்றாள். கேட்டான். கலவரத்திற் சுழன்ற அவன் உள்ளம் அடுத்த நொடியில் ஏற்றதொரு முடிவைத் தாவிற்று, எங்கே என்று திரும்பிப் பார்த்தான். அங்கோர் எழில் ஓவியம் நின்றது!

மீண்டும் மல்லிகை சொன்னாள்: உனக்கா[க] உன் காதலி அதோ எந்நேரம் காத்திருப்பாள் என்று.

ஆண்மையும் இளமையும் இலக்கணமும் அதிர்வேட்டோடு தன்னை நோக்கி வருவதை அங்கயற்கண்ணி நோக்கினாள் அங்கே தன் தோழி மல்லிகை தன்னை நோக்கியபடி நிற்பதையும் நோக்கினாள்.

எனக்காகக் காத்திருப்பார் என் காதலர் என்று அங்கயற்கண்ணி சொன்னதை மல்லிகை மறந்திருக்கமாட்டாள் என்று நினைத்தாள் அங்கயல்!

ஆணழகு வந்து எதிர்நின்று எனக்காகக் காத்திருந்தாயா? அப்படியானால் நான் பெற்றது பெரும்பேறு என்றவுடன், பெண்ணழகு நாணிக் குனிந்து ஆணழகைக் கடைக்கண்ணால் கொன்று என்னை எண்ணி வந்தீர்! இதைவிட நான் பெறத்தக்கது ஒன்றுமேயில்லை என்று போட்டாள் ஒரு போடு.

புகைவண்டி நிலையத்தில் உள்ள தங்கும் அறை நோக்கி நடக்குமுன், இரண்டு வலக்கைகள் அங்கு நின்றிருந்த மல்லிகைக்கு நன்றி தெரிவித்தன.

★

பாட்டுப் போட்டி

புதுமைக் கவிஞர்களை
ஆக்கித் தரும் வகையில்,
பாட்டுப் போட்டிக்கான
பகுதி ஒன்று
விரைவில் தொடங்கும்.
எதிர்பார்க்க!

"ஏனேநீ நாளும் பிச்சை
எடுக்கின்ருய்" என்று கேட்டேன்;
"நானேஒர், ஏழை என்னை
நயக்கின்ற தந்தை தாயோ
வானகம் கவிந்த இந்த
வையத்தே எவரும் இல்லை;
நானெதைச் செய்ய!" என்றே
நவின்றனள் பேதைப் பெண்ணுள்!

பச்சைஒ ணுனைப் வாழும்
பகட்டான செல்வர்க் குள்ள
நச்சகம் அவளுக் கில்லை;
நலமவள் வாழ்வில் இல்லை;
மெச்சவாழ் மக்கள் போல
மெய்வாழ்வை ஏற்போர் ஏற்ருல்
இச்சகம் தன்னில் எந்த
ஏற்றமும் இழிவும் இல்லை!

பிழைப்பெனின் பிச்சை ஏற்றல்
என்றெண்ணி வாழு கின்ருர்;
உழைப்புக்கே உயர்வு நல்கின்
உடன்மாறும் இந்த எண்ணம்;
தழைத்துநம் தமிழர் ஆட்சி
தண்ணொளி வீசும்; மக்கள்
உழைப்புக்கே உயர்வாம்; செல்வர்
உயர்நிலை ஒடிந்து போமே!

எண்ணிலா ஏழை மக்கள்
இருக்கின்ருர் உலகில்; பார்க்கும்
கண்ணிலார் கைகால் இல்லார்
கருத்திலார் தமது நெஞ்சில்
புண்ணுளார் உள்ளார்; இந்தப்
புரையுள்ள உலகம் அன்னுர்
மண்ணுளார் வாழ்வில் நல்ல
மகிழ்வுளார் என்செய் யாதோ?

★ ★ ★

இல்லாத காரணத்தால்தான் இ... நுழைந்து இந்து மதத்தைப் பல கூ... தான் மலேயாவாழ் திராவிட கழகத் த... பதி அவர்கள் தமது :"சொர்க்கத்தில் ... மதத்தை ஒரு ரப்பர்பைக்கு உவமையாகக் கூ...

இவர்கள் இவ்வாறு ஏற்பட்ட இடைச்செருக... கின்ற இந்த இடத்திலேதான் நாம் தீவிரமாக ஒன்... சிந்திக்க வேண்டியிருக்கிறது. காந்தியார், "தீண்டாமை... மதம் அங்கீகரிக்கிறது என்று கூறினுல் நான் இந்து ...த... துறந்து விடத் தயாராக இருக்கிறேன்" என்று கூறுகிருர். இ... மதத்திற்கென்று தேவ நூலும், மகானும் கிடையாது என்றும் தீண்டாமை இந்து மதத்தில் ஏற்பட்ட இடைச்செருகல் என்றும் தெரிந்து கொண்டு காந்தியார் மேற்கண்டவாறு கூறினுல், காந்தியார் எதை இந்து மதத்திற்கு அடிப்படையாகக் கொள்ளுகிருர் என்றே தெரியவில்லை.

தீண்டாமை என்பது இடைச்செருகல் என்று கூறினு... இராமாயணம், பாரதம் முதலிய நூல்களிலே வருணங்கள் இருக்க... காண்கிருேம். இந்த நூல்களுக்கும் இந்து மதத்திற்கும் தொட... என்ன இருக்கிறது? இவைகள் ஒரு வரலாற்றைக் குறிப்பி... நூல்கள்தானே என்று சிலர் கேட்கலாம். இந்த நூல்கள் ... யாஜூர், சாம, அதர்வண வேதங்களோடு தொடர்ச்சியாக ... எண்ணப் படுகின்ற பெருமை உடையது என்றும், பாரதம் ... வது வேதமாக மதிக்கத் தக்கது என்று வேதவியாசரே ... கிருர் என்றும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிருேம். ... இராமாயண, பாரத ஆரம்ப காலத்தையே நாம் இந்து ... ஆரம்பகாலமாகக் கொண்டு விட முடியாது. இருந்த ... அதிலே வருகின்ற ஒவ்வொரு பாத்திரங்களும் இந்து ம... கடவுள்கள் என்பதையும் மறந்து விட முடியாது. முக்... இராமனும், கிருஷ்ணனும் மாபெரும் கடவுள்களாகப் ... படுகிருர்கள்.

மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய இராமனுக்கும், ... னுக்கும் இந்து மதத்தில் நெருங்கிய தொடர்பு உண்டு ... யணத்தில் வண்ணன் ஒருவன் சாமி கும்பிட்டதற்காக ... ஒருவன் இறந்து விட்டதாகக் காண்கிருேம். இது காந்தி... தெரியாத ஒன்று அல்ல. அதற்கும் அவரே விடையா... வணங்கும் இராமன் தசரதனது மகனும் அல்ல; ... கணவனுமல்ல" என்று கூறுகிருர்.

இப்படியாக இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோன்றியவைகளைச் சொல்லிய காரணத்தாலும், இந்து மதத்திற்கென்று அடிப்படையாக ஒரு நூல் இல்லாத காரணத்தாலும் ஏற்பட்ட இடைச்செருகலே இந்தத்தீண்டாமை என்றும் சிலர்கூறுகின்ருர்கள்.

முதலாவதாக இந்து மதத்திற்கென்று ஒரு வேத நூல் இல்லா திருப்பதும், அதற்கென்று ஒரு மகான்

இந்த இடத்தில் காந்தியார் முன்... முரணுக எவ்வளவு தூரம் பேசுகிருர் எ... வேண்டுகிருேம். முக்கியமாக காந்தீயவாதி... வேண்டும்.

இந்து மதத்தில் தீண்டாமை இல்... யார் மட்டும் கூறவில்லை. இந்து ...

...றம்ஸர், ...ண டு எல் ...ர். தோழர்கள் ...கூறியது தீண்டா ...சா தி யை அல்ல ...னாடுகிறோம்.

...வருணங்களினாலாவது ஏதே ...கள் விளைகிறதாஎன்றால் நிச்சய ...ஒன்றுமே கிடையாது. பிராமணன் ...தமோதவும், வைசியர்கள் வ ணி க ம் செய்யவும் சத்திரியர்கள் நாடுகாக்கவும் சூத்திரர்கள் உழுதொழில் செய்யவும்தான் இந்த சாதிப்பிரிவுகள் பயன்பட்டது.

இப்படியாக இன்னவன் இன்னவேலை தான் செய்யவேண்டும் என் ற வரம்பை ...ற்படுத்தியதே பெரியதொரு முட்டாள் ...னம் ஆகும் அவனவன் தனக்குப் பிடித்த ...ான தன் தகுதிக்கேற்ற படியாக வேலை ...பத் தேடிக்கொள்ளமுடியும். மேல்நாடு ...ரில் வ ய து வந்தவர்கள் தங்களுக்குப் ...தமான க ண வ னை யோ அல்லது ...வியையோ தாங்களாகவே தே டி க் ...வதற்குரிய உரிமையைப் பெற்றிருக் ... அவர்கள் எல்லாம் நம்நாட்டு ...ான, அதாவது இன்ன இன்ன ...ர் இன்னன்ன வலைதான் செய்ய ...ும் என்றநியதியைக் கேட்டால் ... நகையாட மாட்டார்களா என்று ...ுப் பாருங்கள்.

...றைய அரசியல் சட்டத்தில் அத் ...யதி கிடையாதே என்று பலர் ...ம். அதற்கான வி டை யை ப் ...தருகிறேன்.

...ாமைக்குக் கா ர ண ம் என்ன? ...ாக அறிவோடு ஆராய்ந்து பார்த் ...யே தீண்டாமைக்குக் காரணம் ...யும். இந்த நாளில் உள்ளதைப் ...ந்தநாளிலும் ம க் க ள் அனை ...ற் று மை யி ன் றி, அதாவது ...ண்டால் இவன் இன்னஇனத் ...வன் என்று அவ்வளவு சுலப ...டுபிடித்துவிட முடியாதபடி ...ரு ந் தி ரு க் க வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

தொலைந்திடும்பார் தீயபகை

[கோனூர், தமிழ்நாவன்]

பட்டறிவு நூல்களெனும் பட்டுமெத் தைதனிலே
படுத்திருக் கின்றுளோர் பாட்டி — அவள்
பக்கம்சென் றேனம்மூ நாட்டி

கிட்டரிய ஆழ்கடலின் முத்துகிகர் — சொற்களினைக்
கீர்த்தியினைக் கேட்டறியச் சொன்னாள் - அவள்
கிழ்மைநிலை தாளவில்லை என்னால்!

தொட்டபழம் பேர்புகழை விட்டதனால் இங்கிலையா?
சொல்கவெனக் கேட்டெழுந்தேன் கிழவி — மிகத்
துடிப்புடனே என்றனுடல் தழுவி

எட்டியளித் தாள்முத்தம், என்னுயிரில் புத்துணர்வும்
எழுந்ததுவே அன்னையெனக் கண்டேன் — ஆ!
இங்கிலையா? சொற்கள்செவி யுண்டேன்!

முடியிழந்து கோலிழந்து நிலையிழந்து தலைகுனிந்த
முத்தமிழாள்! எண்ணிமிக நொந்தேன் — தாய்
மூச்சினிலே ஏக்கமெழக் கண்டேன்!

கொடியிழந்தேன் கொடியவரால் அடிமையென வாழுகின்
கோடிக்கணக் கென்னபயன் மக்கள் - எலாம் [றேன்
கூசுகிறார் வருவதற்கென் பக்கல்

மடிமைவிடு நாள்வருமா? விலங்கொடியும் நாள்வருமா?
விழிகளிலே நீர்பெருகச் சொன்னாள்! — என்
மேனியெலாம் தானினைத்தாள் கண்ணால்!

துடிமுரசம் நெஞ்சினிலே அடித்ததுபோல் ஒருணர்வு
துளைத்ததடோ நெஞ்சினிலே! அன்னாய் — இனி
தொலைந்திடும்பார் தீயபகை மண்ணாய்!

மண விழா

நிகழ் வள்ளுவராண்டு 1990 வைகாசித்திங்கள் 4-ம் நாள் தஞ்சைமாவட்டக் கண்ணுக்குடியில் புரட்சிக்கவிஞர் திரு. பாரதிதாசன் அவர்கள் தலைமையில், இராசமாணிக்கம் B. A., க்கும் இந்திராணிக்கும் திருமணம் நடைபெறும்.